DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 195/2024 PW : 1

Name : கீதா லட்சுமி Age – 45

W/o : சிங்கராவேலு Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 28.01.2026

<u>**வாதி தரப்பு முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு சாட்சி 1 ஆக எனது சான்றுதி வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்கிறேன். இன்று,

1) 17.02.2022 Sale deed (849/2022) certificate copy **Ex A1**

2) 04.03.2022 Sale agreement original **Ex A2**

3) 17.03.2022 Cheque No.000104 of KVB Bank for a sum of Rs.57,500/- issued by the plaintiff to the 1st defendant xerox **Ex A3**

4) 17.04.2022 to 17.06.2022 Amount paid to the 1st defendant by the plaintiff in installments online copy **Ex A4**

5) 24.05.2022 FIR No.164/2022 regaring the offence committed by the husband of the 1st defendant Online copy **Ex A5**

6) 27.05.2022 copy of paper publication Xerox **Ex A6**

7) 01.08.2022 Sale deed No.4000/2022 Certificate copy **Ex A7**

8) 03.01.2024 letter of the 2nd defendant to the pliantiff original **Ex A8**

9) 09.01.2024 Notice of the 2nd defendant to the plaintiff and the 1st defendant original **Ex A9**

10) 12.02.2024 Legal notice of the plaintiff to the 1st defendant along with Acknowledgement office copy **Ex A10**

11) 19.02.2024 Reply legal notice of 1st defendant to the plaintiff original **Ex A11**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.01.28 12:46:17 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 189/2023 PW : 1

Name : யாதவகிரி Age – 45

S/o : பிச்சாண்டி Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 28.01.2026

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1) பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிரதிவாதி Bio bag வியாபாரம் செய்து வந்தார். அவர் வங்கி கணக்கு மூலமாக தான் பணம் பரிவர்தனை செய்யப்பட்டது என்றால் சரிதான். ஒரு முறை மட்டும் ரூ.50,000/– அவர் கையில் வாங்கினார். பிரதிவாதியின் வங்கி கணக்கு மூலமாக விஜயகுமார், வித்யாலட்சுமி ஆகியோர்களுக்கு பண பரிவர்தனை ரூ.15,30,000/– கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன பரிவர்தனை பற்றிய விபரம் பிரதிவாதி அவர் பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த கடன் பத்திரம் எழுதிக்கொடுத்ததாக எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 30.09.2020–ல் ரூ.5,00,000/– கொடுத்த விபரம் என்னுடைய வாதுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்குறிப்பிட்ட 5 லட்சத்தை வா.சா.ஆ.5 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை முன் தேதியிட்டு தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதிலுள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. அவர் தான் அதில் கையெழுத்து போட்டார்.

2) நகைகளின் ரசீதுகள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.7–ல் பிரதிவாதியை அடித்து துன்புறுத்தியதாக பதிவுகள் எதுவும் உள்ளனவா என்றால் அவ்வாறு நான் எதுவும் செய்யவில்லை. 01.05.2021 அன்று நடந்த சம்பவம் வா.சா.ஆ.7–ல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அப்போது விஜயகுமார் என்பவரும் உடன் இருந்தார் என்றால் சரிதான். தீனதயாள், விஜயகுமார், ரஞ்சித், பணம் கொடுத்தாக வா.சா.ஆ.7–ல் உறையாடல் உள்ளதாக என்றால் சரிதான். நான் கொடுத்ததாக வா.சா.ஆ.7–ல் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னுடைய உறவினர் என்றால் சரிதான். பிரதிவாதியின் வங்கி கணக்கு மூலமாக ரூ.15,30,000/– திரும்ப செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. விஜயகுமார் என்பவரும் என்னுடைய உறவினர் என்றால் சரிதான் நான் விஜயகுமாரின் தங்கையை தான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3) விஜயகுமார் ஆனந்தி, வித்யாலட்சுமி ஆகியோருக்கு பிரதிவாதி வங்கி கணக்கு மூலமாக ரூ.15,30,000/– செலுத்தியுள்ளார் என்று சொன்னால் என் மனைவி ஆனந்திக்கு கொடுத்த விபரம் தான் எனக்கு தெரியும் மற்ற விபரம் எனக்கு தெரியாது. தாவாப்படி நான் கேட்ட பரிகாரம் செல்லத்தக்கதல்ல என்றாலும், தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 389/2019 DW : 1

Name : ஈஸ்வரி Age –

W/o : E.முனுசாமி Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 28.01.2026

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கில் நான் சூரியா, கற்பகம், ரதி தேவி ஆகியோர்களுக்கு சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் வாதிகள், முருகனின் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். சுப்பிரமணி, பொன்னன், முனிசாமி, மற்றும் முருகன் ஆகியோர் குப்புசாமிரெட்டியாரின் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். தற்போது சுப்பிரமணி, முனிசாமி மற்றும் முருகன் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். சுப்பிரமணியின் வாரிசுதாரர்கள் தான் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான். முருகனின் வாரிசுதாரர்கள் தான் வாதிகள் என்றால் சரிதான். குப்புசாமிரெட்டியின் தம்பி தான் எழுமலைரெட்டி என்றால் சரிதான். அவருக்கு 4 பிள்ளைகள என்றால் சரிதான். என் கணவர் மட்டும் தான் ஒரு மகன் மற்ற மூன்று பேர் பெண் பிள்ளைகள். 7ம் பிரதிவாதி சூரியா என்னுடைய மகன். 8, 9 பிரதிவாதிகள் என் கணவர் உடன் பிறந்த சகோதரிகள். மல்லிகா என்ற இன்னோரு சகோதரியும் உள்ளார். வாதிகள் எதற்காக இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் எந்த பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியும் நான் வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன்.

2) சொத்து விபரத்தில் அயிட்டம் 1 (1), 1(2) மற்றும் அயிட்டம் 2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியும். என் கணவர் என் திருமணத்திற்கு முன்பு உறவினார். என் அம்மாவின் தம்பி ஆவார். அயிட்டம்

1(1), 1(2)-ஐ 4 சமபாகங்கள் பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிகளுக்கு கூட்டாக பாக உரிமை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதேபோல் தாவா அயிட்ட 2-ல் 6 முதல் 9 பிரதிவாதிகள் வாதிகளின் சுவாதீனம் மற்றும் அனுபவத்தை இடையூறு செய்யகூடாது என்று தடை உத்தரவு கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அயிட்டம் 1(1), 1(2) குப்புரெட்டி சுயமாக சம்பாத்திய சொத்துக்கள் என்றாலும் அதில் அவருடைய வாரிசுதாரர்கள் மட்டும் தான் உரிமை உள்ளது என்று இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியும். பாகப்பிரிவினை கோரி கேட்கப்பட்ட பரிகாரத்தில் 6 முதல் 9 பிரதிவாதிகளின் பெயர் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதி வரை எங்களுக்கு அந்த சொத்தில் பாகம் உள்ளது நாங்கள் எந்த வித counter claim தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) சர்வே எண்.156 கொசஸ்தலை ஆற்றின் வரக்கூடிய சர்வே எண் என்றால் சரிதான். சர்வே எண்.98/3-ல் 83 செண்ட் நிலத்தில் 41 செண்ட் குப்பரெட்டியின் பிள்ளைகள் விஜயகுமார் என்பவருக்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். மீதமுள்ள 41 செண்ட் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். அதை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்பதற்கு எந்த வித ஆதாரம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். சர்வே எண்.114/19 மொத்தம் 18 1/2செண்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடம் 26.08.1953-ல் குப்புசாமிரெட்டியாரின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இடம் கூட்டு குடும்பாக இருக்கும் போது வாங்கப்பட்டது. நாங்கள் கூட்டு குடும்பமாக எந்த வித ஆதாரம் இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1953-ல் கிரையம் வாங்கும் போது அந்த இடம் ஆந்திரா மாநிலம் சித்துர் மண்டலத்திற்கு உட்பட்டதாக இருந்தது என்றால் சரிதான். அந்த இடம் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட பின்பு அருகில் இருந்த 4 செண்ட்டையும் சேர்த்து குப்புசாமிரெட்டி அனுபவித்து வந்து 18 1/2 செண்ட்ற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 22.07.1955-ல்

60 சென்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என் கணவருக்கு இதை பற்றி தெரிய வாய்பிள்ளை என்றால் சரிதான்.

4) 82 சென்ட் குப்புசாமிரெட்டி மட்டும் தான் அனுபவித்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் என் மாமியார் கூட்டுகுடும்பமாக இருந்ததாக என்னிடம் சொன்னார். மேற்சொன்ன விபரத்தை என்னுடைய பதிலுரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 2வது அயிட்ட சென்ட்டில் என் மாமனார் அவரின் சகோதரரிடம் கேட்டதன் பேரில் அவர் அனுமதித்து 6 1/2நிலம் நிபந்தனையின் பேரில் தன்னுடைய வாரிசுதாரர்கள் கேட்டால் அதை ஒப்படைத்துவிட வேண்டும் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டது என்றால் கூட்டுகுடும்பமாக இருக்கும் போது ஆளுக்கு பாதி என்று தான் கிரையம் வாங்கியுள்ளார். நான் சொல்லும் பாகப்பிரிவினையில் குப்புசாமிரெட்யின் பிள்ளைகள் சுப்பிரமணி, மற்றும் அவரின் மகன் விஜயகுமார், பொன்னன், முனிசாமி ஆகியோரும் என் கணவர் முனுசாமி ஆகியோரும் பத்திர பதிவு செய்ய வந்தார்கள். ஆனால் அதில் இன்னோரு மகன் முருகன் வரவில்லை. அவர் கையெழுத்தும் போடவில்லை. ஆனால் முருகனுக்கும் பாகம் உள்ளது. அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

5) குப்புசாமிரெட்டியின் மகன் முனுசாமி, நான், என் மகன் சூரியா ஆகியோர் குப்புசாமிரெட்டியின் மகன் முருகன் மீதும் அவரின் மகன் சந்திரசேகர் மீதும் திருத்தணி உரிமையியல் நீதிமன்றததில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். முருகன் அவர் மகன் சந்திரசேகர் மீது 14.06.2014 அன்று எழுதிய கிரைய பத்திரத்தை ரத்து செய்ய கோரி அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். முருகன், சந்திரசேகர் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் தான் எழுதியிருந்தார் என்றால் சரிதான். எங்களுடைய சொத்தையும் சேர்த்து எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதாக என்னிடம் சொன்னதால் தான் நாங்கள் வழக்கை தாக்கல் செய்தோம். அந்த வழக்கை நானும், முனுசாமியும் 08.02.2016 அன்று வாபஸ் பெற்றுக்கொண்டோம்

என்றால் சரிதான். முனுசாமி அவரின் தம்பி முருகனுக்கு கிரையம் கொடுத்ததால் நாங்கள் தாவாவை வாப்ஸ் பெற்றுக்கொண்டோம். அவ்வாறு நான் எந்த வித சங்கதிகளையும் நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றாலும், எங்களுக்கு சமாதனமாக சென்றுவிட்டதாக அந்த வழக்கை வாபஸ் பெற்றுவிட்டோம் என்று சொன்னால் முனுசாமி தான் அவ்வாறு சொல்லி வாபஸ் பெற்றுவிட்டார். நீதிமன்ற்ததில் இரண்டு வாதிகள் இருக்கும் போது ஒருவர் மட்டும் வாபஸ் பெறமுடியாது முடியாது என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை சம்மந்தமாக நான் எடுக்கும் எந்த வித நடவடிக்கையும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 447/2021 PW : 1

Name : ஆர்.சுரேஷ்குமார் Age – 45

S/o : ராதாகிருஷ்ணன் Village – சென்னை

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 28.01.2026

**வாதி தரப்பு முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு சாட்சி 1 ஆக எனது சான்றுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாதி கம்பெனியின் Divisional Manager ஆவேன். அதில் உள்ள விவரங்கள் தெரிந்து கொண்டு அதில் நான் கையொப்பங்கள் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்கிறேன்.

1) 21.11.2020 Authorisation letter **Ex A1**

2) 27.12.2010 Sale deed (4591/2010) certificate document **Ex A2**

3) 27.12.2010 Sale deed (4592/2010) certificate document **Ex A3**

4) 27.12.2010 Sale deed certificate (4593/2010) document **Ex A4**

5) 05.08.2013 No objection letter issued by District Collector, Tiruvallur **Ex A5**

6) 13.07.2011 patta No.1537 in the name of plaintiff original **Ex A6**

7) A Register Original **Ex A7**

8) 24.09.2018 Request letter from plaintiff to District Revenue officer Original **Ex A8**

9) 26.09.2018 Reply to RTI enquiry by plaintiff to VAO original **Ex A9**

10) 10.06.2019 show cause notice issued to the plaintiff by the Revenue Inspector Original **Ex A10**

11) 25.06.2019 Reply to the show cause notice original **Ex A11**

12) 25.07.2019 Additional reply to the show cause notice original **Ex A12**

13) 05.09.2019 Representation by the plaintiff for issuance of patta original **Ex A13**

14) 06.09.2019 Rejection letter by the Sub Collector, Tiruvallur original **Ex A14**

15) Writ Affidavit in WP No.11692/2020 before Hon'ble High Court, Madras original **Ex A15**

16) 31.08.2020 order in WP No.11692/2020 before Hon'ble High Court, Madras Web copy **Ex A16**

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : PW :

Name : Age –

S/o : Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 28.01.2026

**<u>வாதி தரப்பு முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு சாட்சி 1 ஆக எனது சான்றுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் தெரிந்து கொண்டு அதில் நான் கையொப்பங்கள் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்கிறேன்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : PW :

Name : Age –

S/o : Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 28.01.2026

**<u>வாதி தரப்பு முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு சாட்சி 1 ஆக எனது சான்றுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் தெரிந்து கொண்டு அதில் நான் கையொப்பங்கள் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்கிறேன்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

I Additional District & Sessions Judge,
Tiruvallur.